1996 பிப்ரவரி 17]

42—

சட்டம் பயிலும் மாணவர்களுக்குச் செயல் முறை பயிற்சி

*16572—திரு. ஏ. ரவிக்குமார்:

மாண்புமிகு சட்ட அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மருத்துவம், பொறியியல் போன்று சட்டம் பயிலும் மாணவர்களும் பயன்பெறுகின்ற வகையில் கல்வி பயிலும்போதே அவர்கள் நீதிமன்றங் களுக்குச் சென்று செயல்முறை பயிற்சி பெற அரசு ஆவன செய்யுமா?

முற்பகல் 10.10

மாண்புமிகு திரு. கே.ஏ. கிருஷ்ணசாமி, சட்ட அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சட்டம் பயிலும் மாணவர்களுக்கு ஏற்கெனவே செயல்முறைப் பயிற்சி— "Practical Training to Law College Students"—பெற வேண்டும் என பாடத் திட்டத்தில் வரையறுக்கப்பட்டுள்ளது மட்டுமின்றி அதற்காக மதிப்பெண்களும் கீழ்க்காண்டவாறு வழங்கப்படுகின்றன.

இரண்டு வகை உண்டு. (1) மூன்று ஆண்டு சட்டப்படிப்பு. (2) ஐந்து ஆண்டு சட்டப்படிப்பு. அதில் ஒன்று மூட் கோர்ட்டுக்காக மூன்று ஆண்டு சட்டப்படிப்பில் 20 மார்க்குகளும், நீதிமன்றங்களுக்குச் சென்று வருதலுக்காக 15 மார்க்குகளும், ஆவணங்கள் எழுதுதல் - Writing - பணிக்காக 15 மதிப்பெண்களும் கொடுக்கப்படுகின்றன.

ஐந்து ஆண்டு சட்டப்படிப்பில், மூட் கோர்ட்டுக்காக 25 மார்க்குகளும், சட்ட உதவி மையப் பணிக்கு 15 மார்க்குகளும், நீதிமன்றங்களுக்குச் சென்று கவனித்து வருதலுக்காக 25 மார்க்குகளும், வழக்கறிஞர்களைச் சந்தித்து வருதலுக்காக 25 மார்க்குகளும், ஆவணங்களை எழுதுதல் பணிக்காக 10 மார்க்குகளும் ஆக 100 மார்க்குகள் கொடுக்கப்பட்டு வருகிறது என்பதைத் இம்மாமன்றத்தின் மூலமாக உறுப்பினருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஏ. ரவிக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மருத்துவம் பயிலுகின்ற மாணவர்களுக்கு, பயிலுகின்ற காலத்திலே அவர்களுக்கு 'பிராக்டிக்' கலுக்காக என்று தனியாக வகுப்புகள் ஒதுக்கீடு

செய்து மருத்துவமனை சென்று அவர்கள் பிராக்டிகல் செய்கிறார்கள். அதேபோல, பொறியியல் பயிலும் மாணவர்களும், பயிலுகின்ற காலத்திலே, ஒர்க் ஷாப் சென்று அங்கே பிராக்டிகல் செய்கிறார்கள். ஆனால், சட்டம் படிக்கின்ற மாணவர்கள் மட்டும் கோர்ட்டுக்குச் சென்று பிராக்டிகல் செய்ய முடிவதில்லை. அவர்களுக்குத் தனியாக அதற்கான பாட வகுப்புகளும் கிடையாது. இதனால் சட்டம் படித்து, மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு கோர்ட்டுக்குச் செல்லும்போது கண்ணைக் கட்டி காட்டில் விட்டதுபோல் இருக்கின்றது. அதுவும் 'கோர்ட் பியர்' தணிவதற்குப் பல மாதங்கள் ஆகின்றன. ஆகவே, இன்றையதினம் யாராலுமே செய்ய முடியாத சாதனையாக சட்டப் பல்கலைக் கழகம் கொண்டு வந்த நம்முடைய சாதனைத் தலைவி டாக்டர் புரட்சித் தலைவி மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய பொறகால ஆட்சியில், சட்டம் பயிலுகின்ற மாணவர்களும் பயிலுகின்ற காலத்திலேயே கோர்ட்டுக்குச் சென்று தனியாக பிராக்டிகல் வகுப்புகள் பயிலுவதற்குத் தனியாகப் பாடத் திட்டத்தை அரசு ஒதுக்கீடு செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.எ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1968 ஆம் ஆண்டு வரையிலே அப்ரண்டிஸ் ஷிப் என்ற ஒரு முறை இருந்தது. மூத்த வழக்கறிஞர்களிடத்தில் ஒரு ஆண்டு இருந்து, அவர்களிடத்தில் பயிற்சி பெற்ற பிறகுதான் அவர்கள் வழக்கறிஞராக பதிவு செய்யப்படுவார்கள். அது 1968-வது ஆண்டு கைவிடப்பட்டது. அதன் காரணமாக இன்றையதினம் சட்டம் பயின்றாலும்கூட வழக்கறிஞர்களிடத்தில் திறப்பாடுகள் குறைந்து வருகின்றன என்று உணர்ந்த காரணத்தாலே விரைவில் அந்த கைவிடப்பட்ட அப்ரண்டீஸ் ஷிப் அதாவது ஒரு ஆண்டு மூத்த வழக்கறிஞர்களிடத்திலே 10 ஆண்டுகள் வழக்கறிஞராக தொழில் செய்பவர்கள் அதாவது சீனியர் அட்வகேட் - அவர்களிடத்தில் ஒரு ஆண்டு பயிற்சி பெறுவதற்கு அப்ரண்டீஸ் ஷிப் என்ற ஒரு முறையைக் கொண்டு வருவதற்கு இண்டியன் பார் கவுன்சிலும், சென்டரல் கவர்ன்மெண்டும், மாநில அரசும் முயன்று வருகின்றன. விரைவிலே அது வந்தால் நிச்சயமாக சீரமைப்பு ஏற்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஏ. ரவிக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அப்ரண்டீஸ் ஷிப் கொடுக்கின்ற அந்த திட்டத்தை மறுபடியும் கொண்டு வருவதாகக் கூறினார்கள். அதில் எந்த முறையில் பிராக்டிகல் செய்வதற்கு ஆவன செய்வார்கள் ? உதாரணத்திற்கு நேரிடையாகக் கோர்ட்டுக்குச் சென்று பிராக்டிகல் செய்கின்ற ஒரு

முறையைக் கொண்டு வருவார்களா அல்லது 'ஆர்டிஃபீசியல் கோர்ட்டை' வகுப்பிலே உருவாக்கி அதிலே பிராக்டிகல் பயிற்சி எடுப்பதற்கு ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1968-ஆம் ஆண்டு வரையிலே இருந்த அப்ரண்டீஸ் ஷிப் மூலமாக முழுமையான பயிற்சியையும், பக்குவத்தையும், கனிவையும் வழக்கறிஞர்களுக்குக் கொடுக்கப்பட்டது. இதுவும் அதைப் போல் இருக்கும். ஆகவே, இதையெல்லாம் தீர்மானித்துச் செய்ய வேண்டியது இந்தியன் பார் கவுன்சில் என்பதனையும், அதேபோல் தமிழ்நாடு பார் கவுன்சில் என்பதனையும் வழக்கறிஞர்களுடைய நலனைக் கவனிக்க அந்தத் தனி அமைப்புகள் - அடானமஸ் பாடிகள் - இருக்கின்றன. அவர்கள் என்ன கைடு லைன் கொடுக்கிறார்களோ அதன்படி அந்த அமைப்பு உருவாக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சி. இராமசுவாமி.

திரு. சி. இராமசுவாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டப்படிப்பு தரம் தாழ்ந்துவிட்டது. காரணம், இப்பொழுது இருப்பது ஹைதர் அலி காலத்து 'சிலபஸ்'. ஐந்து ஆண்டு படிப்பிற்கோ மூன்று ஆண்டு படிப்பிற்கோ படித்துவிட்டு வந்த மாணவர்கள் அட்வகேட் ஆக 'என்ரோல்' செய்துவிட்டு கோர்ட்டுக்கு வந்தால் அவர்களுக்கு ஒன்றுமே தெரிவதில்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லும்போது மூன்று ஆண்டு படிப்பிற்கு பிராக்டிகலுக்கு 50 மார்க்குகளும், ஐந்து ஆண்டு படிப்பிற்கு பிராக்டிகலுக்கு 100 மார்க்குகளும் என்று சொன்னார்கள். நான் கேட்பதெல்லாம் பொறியியல், மருத்துவம் படிக்கின்ற மாணவர்களுக்கு எப்படி ஹாஸ்பிடலிலே பயிற்சிக் கொடுக்கப்படுகிறதோ அதுபோன்று சட்டக் கல்லூரியில் படிக்கின்ற மாணவர்களுக்கு, ஐந்து ஆண்டு படிக்கின்ற மாணவர்களுக்கு இரண்டு ஆண்டுகள் கட்டாயமாக கோர்ட்டுக்குச் சென்று நடவடிக்கைகளைக் கவனித்து வரவேண்டும் என்றும், மூன்று ஆண்டு படிக்கின்ற மாணவர்களுக்கு ஒரு ஆண்டு கோர்ட்டுக்குக் கட்டாயமாகச் சென்று நடவடிக்கைகளைக் கவனித்து வரவேண்டும் என்ற வகையிலும், அதற்கான பாடத் திட்டங்களை மாற்ற அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10.15

மாண்புமிகு திரு. கே.ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே விளக்கியபடி நடைமுறையில்

இருக்கின்ற 'Practical Training to Law College Students' என்பது ஒரு செல் அரித்த முறையாக இருக்கின்றது. அது. தக்க வழக்கறிஞர்களை உருவாக்கவில்லை. இதைக் கண்டறிந்த பிறகுதான் 1968-க்கு முன்பு இருந்த அப்ரண்டீஸ்ஷிப் என்ற நடைமுறையைக் கொண்டுவர பார் கவுன்சில் முயன்று கொண்டிருக்கிறது. அது விரைவில் நிச்சயமாக வரும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஓ. எஸ். அமர்நாத்.

திரு. ஓ.எஸ். அமர்நாத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டம் பயிலும் மாணவர்களுக்கு செயல்முறைப் பயிற்சி அளிப்பதன் விளக்கத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இன்றைக்கு மருத்துவம் மற்றும் பொறியியல் போன்ற பட்டதாரிகளுக்குக் கூட பயிற்சி வழங்கப்படுகிறது. மருத்துவம் படித்து கடைசியாக ஹவுஸ் சர்ஜன் பயிற்சி பெறுகின்ற மருத்துவப் பட்டதாரிகளுக்கு அரசு ஊக்கத் தொகை வழங்குகிறது. அதைப் போன்று சட்டம் பயிலும் மாணவர்களுக்கும் செயல்முறைப் பயிற்சியின்போது உதவித் தொகை வழங்க முடியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் திரும்பத் திரும்பச் சொல்லிக் கொள்ள விரும்புவது, வழக்கறிஞர்களுடைய பிரச்சினைகளைக் கவனித்துக் கொள்வதற்கு அதற்கென ஒரு பார் கவுன்சில் இருக்கிறது. அதற்கும் அரசாங்கத்திற்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை. அவர்களுடைய சுக துக்கங்களைக் கவனிக்க வேண்டிய பொறுப்பு பார் கவுன்சிலுக்கு இருக்கிறது. அவர்கள் என்ன முடிவு எடுக்கிறார்களோ, அந்த முடிவின்படி வழக்கறிஞர்களுக்கு வசதிகள் செய்து தரப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 43, டாக்டர் மு. சீனியம்மாள் மற்றும் திரு. ஓ. எஸ். அமர்நாத், மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர்.

43—

கரூர்-திண்டுக்கல் அகல இரயில் திட்டத்திற்கு நில ஒதுக்கீடு

*65293—டாக்டர் மு. சீனியம்மாள்:

திரு. ஓ.எஸ். அமர்நாத்:

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—